மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வாடிப்பட்டி மதுரை மாவட்டம்

முன்னிலை திரு. D. ராம்கணேஷ் M.A.. M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி

2021ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 23ம் நாள்

ஸ்ரீபிலவ வருடம் ஆவணி மாதம் 07ம் நாள் திங்கட்கிழமை

**IA.No. 378/2021**

**in**

**OS. No.37/2021**

G.பார்வதி
S.முருகன் …… மனுதார்கள்/வாதிகள்

/ எதிர்/

P.பிச்சைமணி …… எதிர்மனுதார்/
பிரதிவாதி

இம்மனு 18-03-2021 ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.கோவிந்தவாசகம் அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதார் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருM.கோகுல்நாத் மற்றும் திரு N. சக்திவேல் ஆகியோர்கள் ஆஜராகியும் கடந் 18-03-2021 - ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இம்மனுவில இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான......

<u>**உத்திரவு**</u>

இந்த நிர் மனுவும் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், மனுதாரர்கள்/வாதிகளுக்கும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கும் சொந்தமான பொதுச்சுவற்றை இடித்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி சொந்தமாக கட்டிடம் கட்டி வருவதற்கு எதிராக இடைக்கால தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>(1) மனுதார் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**

மனுதார் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது பிரதிவாதியை கட்டுப்படுத்தி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தானது பொது சுவர் ஆகும். தாவா சொத்து ஆதியில் 1– ம் வாதிக்கு பட்டா எண் –579 படியும், 2– ம் வாதிக்கு பட்டா எண் –790 படியும் பாத்தியமான சொத்தாகி அதில் வாதிகள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். வாதிகளின் வீட்டிற்கு அருகிலே பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார். வாதியின் வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையே பொது சுவர் ஒன்று அமைந்துள்ளது. மேற்படி பொது சுவற்றை வாதிகளும், பிரதிவாதியும் பொதுவாக பயன்படுத்திக்கொள்வது என ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு அது தொடர்பாக வாதிகளும் பிரதிவாதியும் சேர்ந்து கடந்த 14–12–2003–ம் தேதியில் ஒப்பந்தம் ஒன்று எழுதிக்கொள்ளப்பட்டது. அதில் 2–ம் வாதியும், பிரதிவாதியும் கையெழுத்திட்டுள்ளார்கள். அனால் தற்சமயம் பிரதிவாதி ஒப்பந்தப்படி நடந்துகொள்ளாமல் பொது சுவரை அப்புறப்படுத்திவிட்டு, வாதிகளின் அனுமதி இல்லாமல் பிரதிவாதிக்கு மட்டும் சொந்தம் என்பதுபோல் கட்டிடம் கட்டி வருகிறார். அவ்வாறு பிரதிவாதி கட்டிடம் கட்டிவிட்டால் வாதிகளின்

அனுபவத்திற்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டுவிடும். எனவே பொது சுவற்றை இடித்துவிட்டு அதில் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் வீடு எதுவும் கட்டக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதியின் செயலை நீதிமன்ற உத்திரவு மூலமே தடுத்து நிறுத்த முடியும். எனவே பிரதிவாதி பொது சுவற்றை இடித்து பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியமானதாக கட்டிடம் கட்டி வருவதற்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதுரைக்கப்பட்டது.

2) **<u>எதிர்மனுதார் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை ஆகும். தாவா சொத்து ஆதியில் 1– ம் வாதிக்கு பட்டா எண் –579 படியும், 2– ம் வாதிக்கு பட்டா எண் –790 படியும் பாத்தியமான சொத்தாகி அதில் வாதிகள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்பதையும், வாதியின் வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையே பொது சுவர் ஒன்று அமைந்துள்ளது என்பதையும், மேற்படி பொது சுவற்றை வாதிகளும் பிரதிவாதியும் பொதுவாக பயன்படுத்திக்கொள்வது என ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, அது தொடர்பாக 2–ம் வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து கடந்த 14–12–2003–ம் தேதியில் ஒப்பந்தம் ஒன்று எழுதிக்கொள்ளப்பட்டது என்பதையும், வாதிகளும் பிரதிவாதியும் மேற்படி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்கள் என்பதையும், தற்சமயம் பிரதிவாதி ஒப்பந்தப்படி நடந்துகொள்ளாமல் பொது சுவரை அப்புறப்படுத்திவிட்டு, வாதிகளின் அனுமதி இல்லாமல் பிரதிவாதிக்கு மட்டும் சொந்தம் என்பதுபோல் கட்டிடம் கட்டி வருகிறார்என்பதையும், வாதிகளே நிரூபணம் செய்யவேண்டும். உண்மையில் பிரதிவாதிக்கு

சோலைக்குறிச்சி கிராமம் வைத்தியநாதபுர தெருவில் கட்டுப்பட்ட மனைவரி பட்டாஎண் 936–க்கு நத்தம் குடியிருப்பில் சர்வே எண் 219/35–ல் கட்டுப்பட்ட சொத்தானது தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியமான சொத்தாகும். பிரதிவாதியின் இடத்திற்கு கிழக்கே, 2–ம் வாதிக்கு பாத்தியமான சர்வே எண் 219/36–ல் கட்டுப்பட்ட இடமும் அதேபோல் பிரதிவாதியின் இடத்திற்கு மேற்கே **1–**ம் வாதிக்கு பாத்தியமான சர்வே எண் 219/33–ல் கட்டுப்பட்ட இடமும் அமைந்துள்ளது. பிரதிவாதிக்கு பாத்தியமான சர்வே எண் 219/35–ல் கட்டுப்பட்ட சொத்திற்கு கடந்த 30–11–2020ம் தேதி சர்வேயருக்கு பணம் கட்டி அளந்து அத்துமால் காண்பித்து, அதன் அடிப்படையில் பிரதிவாதி கட்டிடம் கட்டி வருகிறார். வாதிகள் குறிப்பிடுவது போல் வாதிகளுக்கு பாத்தியமான சொத்தில் எந்தவொரு கட்டிடமும் கட்டவில்லை. மேற்படி இடப்பிரச்சனை தொடர்பாக 1–ம் வாதி வாடிப்பட்டி இலவச சட்ட பணிகள் குழுவில் LSPNo–66/2020 மனு கொடுத்து அதன் பேரில் பிரதிவாதி 23–12–2020–ம் தேதி ஆஜராகி தமது வாதத்தை ஆவணங்களுடன் எடுத்துக்கூறிய பின்னிடு இரண்டு தரப்பிலும் சம்பத்தப்பட்ட இடத்தை அளந்து பார்த்துக்கொள்ள அறிவுறுத்தினார்கள். மேற்படி பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வேலை செய்வதை பொறுக்க முடியாமல் மேற்படி விபரங்களை மறைத்து வாதிகள் இந்த நிர் அசல் வழக்கு மற்றும் மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். மேலும் வாதிகள் இருவரும் தனித்தனியாக வாடிப்பட்டி இலவச சட்ட பணி குழுவில் மனுக்கள் கொடுத்து அதுவும் LSPNo–15/2021 and LSPNo–16/2021 எண்களின் படி விசாரணை செய்யப்பட்டு இறுதியில் இருதரப்பினரும் பிரச்சனைக்குரிய இடத்தினை சர்வேயர் மூலம் அளந்து கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டது. மேற்படி சஅவரது இடத்துக்கு கட்டிடம் கட்டியுள்ளதாக சொல்லியுள்ளார். மேற்படி சர்வேயர் அறிக்கையும் வாடிப்பட்டி சட்ட பணிக்குழு அலுவலகத்திற்கு இதுநாள்வரை வரவில்லை. மேற்படி

சட்டப்பணிக்குழுவில் மனுக்கள் நிலுவையில் உள்ளபோதே வாதிகள் 16–03–2021ம் தேதியில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேலும் வாதிகள் சட்டப்பணிக்குழுவில் கொடுத்த மனுக்களும் 23–03–2021ம் தேதியில் முடித்து வைக்கப்பட்டது. மேலும் வாதிகள் பிரதிவாதியின் வளர்ச்சியை பொறுக்கமுடியாமல் கட்டிட பணிகளை தடுத்து நிறுத்தும் எண்ணத்தில் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் மேற்படி பிரதிவாதி மற்றும் அவரது மனைவி முத்துமாரி என்பவர் கடந்த 08–04–2021ம் தேதியில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கட்டிட வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது 1–ம் வாதி மற்றும் அவரது மகன் சுரேஷ் என்பவர் சட்டத்திற்கு புறம்பாக ஆபாசமாக பேசி கட்டிட வேலையை தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு கொலை மிரட்டல் விடுத்தனர். இதுசம்பந்தமாக பிரதிவாதி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் மனு கொடுத்து நிலுவையில் உள்ளது. எனவே உண்மை விபரங்கள மறைத்து பிரதிவாதிக்கு மனஉளைச்சல் காலவிரையம் மற்றும் பொருளாதார விரையத்தை ஏற்படுத்தும் உட்கருத்துடன் தாக்கல் செய்துள்ள இந்த நிர் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதார்/ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த நிர் மனு அனுமதிக்கக்கூடியதா என்பதே தீர்வு காணவேண்டிய பொருண்மை ஆகும்.

**<u>தீர்வு</u>**

4) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு தரப்பினர்கள் அருகருகே வசித்து வருபவர்கள் என்பதும், 2– ம் வாதி மற்றும் பிரதிவாதி வீட்டிற்க்கு இடையேயுள்ள சுவர் தொடர்பாக வழக்கு தரப்பினர்களுக்கிடையே பிரச்சினை

ஏற்பட்டுள்ளது என்பதும் இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மை ஆகும். மேற்படி சுவர் வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு பொது பாத்தியமான பொதுசுவர் என்று வாதித்தரப்பில் வைத்துரைத்து அதற்கு ஆதரவாக மா.சா.ஆ–1 முதல் மா.சா.ஆ–9 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆக வாதிகள் பெயரில் சர்வே எண் 219/33 மற்றும் 219/36 க்கு ஏற்பட்ட மனைவாரி தோராய பட்டாவாகவும், ம.சா.ஆ.3 மற்றும் 4 ஆக வாதிகள் குடியிருந்து வரும் வீட்டிற்கு செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதுகளாகவும், ம.சா.ஆ.5 ஆக வாதிகள், பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்த பத்திரத்தின் அசலாகவும், ம.சா.ஆ.6 மற்றும் 7 ஆக வாதிகளின் அடையாளத்தைக்காட்டக்கூடிய ஆதார் அட்டைகளாகவும், ம.சா.ஆ. 8 ஆக தாவா சொத்தில் அமைந்துள்ள பொது சுவர் புகைப்படம் எடுக்கப்பட்டதற்கான புகைப்படம் மற்றும் கணினி தகடுடன் கூடியதாகவும், ம.சா.ஆ.9 ஆக வாடிப்பட்டி வட்ட சார் ஆய்வாளர் தாவா இடத்தை அளவீடு செய்வது தொடர்பாக வாதிகள், பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு மற்றும் அதன் தொடர்ச்சியாக கொடுக்கப்பட்ட சான்றிதழாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் பிரதிவாதி தரப்பில் மேற்படி சுவர் பொது சுவர் இல்லையென்றும் அதுவும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட பட்டா இடத்தில் கட்டுப்பட்டுவந்துள்ளது என்றும், அது தொடர்பாக ஏற்கனவே சர்வேயர் மூலம் அளந்து அத்துமால் உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்வாதம் செய்து அதற்கு ஆதரவாக எ.மா.சா.ஆ–1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.1 ஆக பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட மனைவாரி தோராயபட்டாவாகவும், எ.ம.சா.ஆ.2 மற்றும் 3 ஆக தாவா சொத்தினை அளவீடு செய்வதற்கு வருவாய்துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பானதாகவும், எ.ம.சா.ஆ.4 ஆக வாடிப்பட்ட வட்ட சட்டப்பணிக்குழுவில் கொடுக்கப்பட்ட மனுவின் அடிப்படையில்

பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பாகவும், எ.ம.சா.ஆ.5 ஆக பிரதிவாதி சோழவந்தான் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனுவிற்கான புகார் மனு ஏற்பு ரசீதாகவும், எ.ம.சா.ஆ.6 ஆக பிரதிவாதி கொடுத்த புகார் மனுவாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5)** வாதி தரப்பில் ஏற்கனவே பிரதிவாதி மா.சா.ஆ–5 ஆவணத்தின் படி தாவா சுவர் பொதுசுவர் என்பதை ஒப்புக்கொண்டு ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு தற்சமயம் அதற்கு முரணாக செயல்படுவதாக வாதுரைக்கப்பட்டது. இது சம்பந்தமாக பரிசீலனை செய்யும் போது, மேற்படி ம சா ஆ 5 ஆவணத்தில், **"சுவர் இருவருக்கும் பொதுவானது மேற்கொண்டு சுவரை பொறுத்தவரை நம் இருவருக்கும் பொதுவானது என்று சம்மதித்து நாம் கையெழுத்திட்டுள்ளோம் இந்த போது சுவரை தவிர்த்து அவரவர் வீட்டில் நமக்கு உள்ள இடத்தை நாம் அனுபவத்திக்கொள்ள வேண்டும் என்றும் வேறு உரிமைகள் ஏதும் நாம் கூற இயலாது என்று நாம் இருவரும் மனப்பூர்வமாக சம்மதித்து இதில் கையெழுத்து செய்து கொண்டோம்"** என குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் மேற்படி ஒப்பந்தப்பத்திரம் பிரதிவாதியால் கையெழுத்திட்டு கொடுக்கப்படவில்லை என்றும் அதில் தாவா சொத்தின் சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது. ஆனால் மேற்படி ஒப்பந்தப்பத்திரத்தின் உண்மைத்தன்மை மற்றும் செல்லும் தன்மை குறித்து இம்மனு விசாரணையில் தீர்வு காண இயலாது என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மேலும் மா.சா.ஆ–9 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமாகிய வாடிப்பட்டி வட்ட சார் ஆய்வாளர் கொடுத்துள்ள அறிக்கையில் **"மனுதாருக்கு கிராம மற்றும் வட்ட கணக்குகளின்படி அத்துமால் காண்பிக்கப்பட்டது அதன் அடிப்படையில் திரு .முருகன் புல எண்**

**திருமதி பார்வதி புல எண் மற்றும் பிச்சைமணி ஆகிய மூன்று நபர்களின் தற்போதைய அத்துமால் பொதுசுவராக கட்டப்பட்டு உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது . அதன்படி வழக்கு தரப்பினர்களின் சொத்துக்களின் எல்கையில் சுவர் அமையப்பெற்றுள்ளது தெரியவருகிறது. ஆனால் பிரதிவாதி தரப்பில் தாவா சுவர் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தான சர்வே எண் 219/35–ல் உள்ளடங்கி வருவதாக எதிர்வாதம் செய்து ஏற்கனவே சர்வேயர் மூலம் அளந்து உறுதி செய்த பின்னீடே கட்டிடம் கட்டி வருவதாகவும் எதிர்வாதம் செய்யப்பட்டது. ஆனால் அதனை நிரூபணம் செய்யும் பொருட்டு மேற்படி சர்வேயர் கொடுத்த அறிக்கை அல்லது சான்றிதழ் பிரதிவாதி/எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எ.ம,சா.ஆ,2 மற்றும் எ.ம.சா.ஆ.3–லும் அது தொடர்பான குறிப்புகளும் எதுவும் இல்லை.

6) அதன்படி தாவா சுவர் பொதுசுவராக உள்ளதா அல்லது பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளடங்கி வருகிறதா என்பதை இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் வழக்கின் இறுதியிலேயே தீர்வு காண இயலும். பிரதிவாதி தரப்பு எதிர்வாதத்தின்படி தாவா பிரச்னைக்குரிய இடத்தில் கட்டிடம் எதுவும் கட்டவில்லை என எதிர்வாதம் செய்யவில்லை எனவே பிரச்னைக்குரிய இடத்தில் அமைந்துள்ள சுவர் பொதுபாத்தியமானதா அல்லது பிரதிவாதிக்கு தனித்து பாத்தியமானதா என்பதை அசல் வழக்கில் தீர்வு காண்பதற்கு முன்பாக அதன் இயற்கை அமைப்பில் மாறுதல் செய்து பிரதிவாதி கட்டுமான பணிகள் மேற்கொண்டுவிட்டால் மனுதாருக்கு கணிசமான இழப்பு ஏற்படும் என்பதோடு வழக்கினை அறுதியாகவும் முழுமையாகவும் தீர்வு காண இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அதன்படி வழக்கின் முதல் தோற்ற நிலையும், சமவாய்ப்பு நிலையும் வாதிக்கு சாதகமாக இருப்பதாகவே தீர்வு கண்டு இம்மனு அனுமதிக்கப்பட்டும் அசல் வழக்கு முடியும் வரை பிரதிவாதி தாவா சொத்தில்

அமைந்துள்ள சுவற்றில் எவ்வித கட்டுமானப்பணிகளும் செய்யக்கூடாதென்றும் வழக்குமுடியும் வரை தற்போதைய நிலையிலேயே இருக்கவேண்டுமென்றும் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டும் அசல் வழக்கு முடியும் வரை பிரதிவாதி தாவா சொத்தில் அமைந்துள்ள சுவற்றில் எவ்வித கட்டுமானப்பணிகளும் செய்யக்கூடாதெதென்றும் வழக்குமுடியும் வரை தற்போதைய நிலையிலேயே இருக்கவேண்டுமென்றும் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ம் நாள் அவையறியப்பகரப்பட்டது.

(ஓம். D. ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | பட்டா எண் 579 ன்படியான பட்டா |
| ம.சா.ஆ.2 | பட்டா எண் 790 ன்படியான பட்டா |
| ம.சா.ஆ.3 | 1ம் வாதி பெயரிலான வீட்டு வரி ரசீது அசல் |
| ம.சா.ஆ.4 | 2ம் வாதி பெயரிலான வீட்டு வரி ரசீது அசல் |
| ம.சா.ஆ.5 | 14.10.2003 ம் தேதியிட்ட ஒப்பந்தபத்திரம் அசல் |
| ம.சா.ஆ.6 | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் |

ம.சா.ஆ.7 2 ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல்

ம.சா.ஆ.8 தாவா பொதுசுவர் காட்டும் புகைப்படம் கணினி தகடுடன்

ம.சா.ஆ.9 030.02.2021 ம் தேதியிட்டு வாடிப்பட்டி வட்ட சார் ஆய்வாளர் அனுப்பிய அறிவிப்பு

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

எ.ம.சா.ஆ.1 பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட மனைவாரி தோராயபட்டா

எ.ம.சா.ஆ.2 தாவா சொத்தினை அளவீடு செய்வதற்கு வருவாய்துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை

எ.ம.சா.ஆ.3 தாவா சொத்தினை அளவீடு செய்வதற்கு வருவாய்துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை

எ.ம.சா.ஆ.4 வாடிப்பட்ட வட்ட சட்டப்பணிக்குழுவில் கொடுக்கப்பட்ட மனுவின் அடிப்படையில் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு

எ.ம.சா.ஆ.5 பிரதிவாதி கொடுத்த புகார் மனுவிற்கான புகார் மனு ஏற்பு ரசீது

எ.ம.சா.ஆ.6 பிரதிவாதி கொடுத்த புகார் மனு

(ஓம். D. ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//